7. அரசினர் தீர்மானம்.

பேரவை நாள் குறிப்பிடப் பெறமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''பேரவை விதி 25 (1) ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1—51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

66. உடுக்குறியிடாத வினாக்களும்-விடைகளும் (எண்கள் 351 முதல் 500 வரை)

(8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

351—

கோவில்களால் நடத்தப்பெறும் அன்பு இல்லங்கள்.

வினா 351.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டின் அனாதைச் சிறுவர்களுக்கென கோவில்களால் நடத்தப்படும் அன்பு இல்லங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் 1—3—1980 நாளன்றைய நிலவரப்படி உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?